பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: மார்கழி 3 (17—12—68) செவ்வாய் ★ வெளியீடு: மார்கழி 4 (18—12—68) புதன் [இதழ்: 152

'போர்டு'க்குப் பதில் 'வாரியம்'

திருச்சி, டிச. 17—

ஆங்கிலத்தில் 'போர்டு' (Board) என்று குறிப்பிடப்படும் சொல்லுக்குத் தமிழில், 'வாரியம்' என்று குறிப்பிடுமாறு தமிழக அரசு, தொடர்புடையவர்களுக்குத் தெரிவித்துள்ளது.

இனி, ரெவின்யூ போர்டு, 'வருவாய்த்துறை வாரியம்' என்றும், 'மாநில காதி -- கிராமத் தொழில் போர்டு', 'தமிழகக் கதர் -- கிராமத் துறை வாரியம்' என்றும் அழைக்கப்படும்.

மூடிய பஞ்சாலைகளின் எதிர்காலம்

கேரளத்தில் இந்தி எதிர்ப்பு

மத்திய பள்ளிமுன் மறியல்

திருவனந்தபுரம், டிச. 16—

திருவனந்தபுரத்தில் பல கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் இன்று மத்திய உயர்நிலைப் பள்ளி (மத்திய அரசு ஊழியர் பிள்ளைகளுக்காக நடத்தப்படும் தனி பள்ளிக்கூடம்) முன்பு மறியல் செய்தனர். போலீசார் தலையிட்டு அவர்களை அப்புறப்படுத்தினர்.

மத்தியப் பள்ளிகளில் இந்தியையும் பாட மொழியாகப் புகுத்தியதை எதிர்த்து, கேரள திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் இந்தக் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ததாகத் தெரிகிறது.

எல்லா ஆலைகளையும் அரசு ஏற்காதாம்

நாடாளுமன்றத்தில் அமைச்சர் கைவிரிப்பு

புதுடில்லி, டிச. 17—

' மூடப்பட்டுள்ள எல்லாப் பஞ்சாலைகளையும் அரசு எடுத்து நடத்துவது என்பது இயலாத காரியம்" என்று கைவிரித்துவிட்டது டெல்லி அரசு !

நேற்று நாடாளுமன்ற மேலவையில், காங்கிரசு உறுப்பினர்கள் உட்படப் பல்வேறு உறுப்பினர்களும், மூடப்பட்ட ஆலைகளை கூடிய விரைவில் அரசு மேற்கொண்டு, வேலையிழந்து தவிக்கும் தொழிலாளர்கட்கு வேலை கொடுக்க வேண்டும் என்று கோரினர்.

"இந்த ஆலைகளை அரசு எடுத்துக்கொள்வது என்பது அவ்வளவு விரைவில் நடவாது ; ஒரு ஆலையை எடுத்து நடத்த மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்காது ; அப்படிக் கிடைத்தாலும் மாநில அரசின் ஒப்புதல் கிடைக்காது ; அப்படி இரண்டு அரசுகளும் ஒப்புக்கொண்டால் துணித் தொழில் கார்ப்பரேஷன் தலைவர் வாசவதா அதற்குச் சம்மதிக்கமாட்டார் ; இந்த நிலையைத் தவிர்க்க வேண்டும்'' என்று காங்கிரசு உறுப்பினரான அர்ச்சுன் அரோரா கூறினர்.

மூடப்பட்ட எல்லா ஆலைகளையும் அரசு எடுத்து நடத்த முடியாது என்றும், சில ஆலைகள் இலாபகரமாக இயங்கமுடியாத நிலையிலும் இருப்பதாகவும், மற்றும் சில ஆலைகள் சம்பந்தமான வழக்குகள் நீதிமன்றத்தில் இருந்துவருவதாகவும் வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங் கூறினர்.

கடந்த 12 மாத காலத்தில் 40 ஆலைகள் மூடப்பட்டிருப்பதாகவும், ஏற்கனவே மூடப்பட்ட ஆலைகளையும் சேர்த்து 1968 அக்டோபர் முடிய மொத்தம் 59 ஆலைகள் இயங்காமல் இருந்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

"இந்த ஆலைகளெல்லாம் தனியார் துறையைச் சார்ந்திருப்பதால், அவற்றை மீண்டும் திறப்பதற்கான வழிவகைகளைத் தனியார் துறையினரே ஆராய வேண்டும்'' என்ருர் அவர்.

ஒன்பது ஆலைகள் சம்பந்தமான பரிசீலனை முடிந்துவிட்டதாகவும், மற்றும் 15 ஆலைகளைப் பற்றிய பரிசீலனை நடந்துவருவதாகவும், 21 ஆலைகள் சம்பந்தமாக மாநில அரசுகளுடன் நடத்துவரும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும், 13 ஆலைகள் தொடர்பான வழக்குகள் வழக்குமன்றத்தில் இருந்துவருவதாகவும், ஓர் ஆலை அதிகாரம் பெற்ற ஒருவரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பஞ்சாலைத் தொழிலில் இத்தகைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதற்கு மத்திய அரசு கடைபிடித்துவரும் கொள்கையே காரணம் என்பதை அமைச்சர் மறுத்தார் ; 'ஆலைகளை நவீனப்படுத்துவதற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் விதிக்கவில்லை' என்ருர் அவர்.

"கலால் வரியிலிருந்து பஞ்சாலைகட்கு விலக்களிக்கப்படுமா?'' என்று கேட்கப்பட்டதற்கு, துணையமைச்சர் திரு. குரேஷி பதிலளிக்கையில், 'அதுபற்றி அரசு எவ்வித முடிவும் செய்யவில்லை' என்ருர்.

மதுரையில் மூடிய பஞ்சாலைகளைத் திறக்காவிடில், அந்த ஆலைகளைத் தாங்களே எடுத்துக்கொள்ளப்போவதாக அங்குள்ள 16,000 தொழிலாளர் அச்சுறுத்தியுள்ளதாக நியமன உறுப்பினரான திரு. ஜி. இராமச்சந்திரன் அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதற்கு அமைச்சர் தினேஷ் சிங், பதிலளிக்கையில், 'இது நடவாத காரியம்' என்ருர்.

துணித் தொழில், வலிமையான அடிப்படையில் இயங்க அரசு தன்னல் முடிந்ததையெல்லாம் செய்துவருகிறது என்றும், பல்வேறு ஊக்கமளிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் மேலும் கூறினர்.

"பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சட்டம் அனுமதிக்கும் அளவுக்கு உரிய நிவாரணங்கள் கிடைக்கும்'' என்ருர்.

இராசராச சோழன் வழங்கிய மானியம் எங்கே?

கோவில் சொத்துக்களை அபகரித்தவர்கள் கண்டுபிடிக்கப்படுவர்

கைமாறிய நிலங்களை மீட்பதற்கு நடவடிக்கை

அறநிலையத் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

மதுரை, டிச. 17—

"தஞ்சைப் பெரிய கோவிலுக்கு இராசராச சோழன் நிலம் எதுவும் வைத்திருக்காமலா போயிருப்பான் என்றெண்ணி, ஏடுகளைப் புரட்டிப் பார்த்தேன் ; 1,60,000 கலம் நெல் தரக்கூடிய நிலத்தைக் கோயிலுக்காக வைத்துவிட்டுத்தான் போயிருக்கிருன் ; ஆனல், அந்த நிலங்களை யார் யாரோ, தங்களுக்குத் தான் சொந்தம் என்று ஆக்கிக்கொண்டுவிட்டார்கள் !

"அது மட்டுமா ? 42 ஆயிரம் கழஞ்சுப் பொன் வைத்து விட்டுப் போயிருக்கிருன் --- அதாவது, சுமார் 26 ஆயிரம் பவுன் தங்கமாகும் ; ஆனல், இன்று அவற்றைக் காணேம்."

இவ்வாறு அறநிலையத் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மீனுட்சி சுந்தரேசுவரர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"கோவிலுக்குரிய சொத்துக்களை யார் அபகரித்து அனுபவித்து வந்தாலும் சரி -- அது அவர்களிடமிருந்து பெறப்பட்டு, கோவிலுக்குச் சேர்க்கப்பட்டுவிடும்.

கோவில்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலங்கள் எல்லாம் திரும்ப அந்தக் கோவில்களுக்கே கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு இந்து அறநிலைய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கோவில் நிலங்களையும் பணத்தையும் தனிப்பட்ட ஆட்கள் எடுத்துக்கொள்வதாகப் புகார்கள் வந்துள்ளன ; கோவில்களுக்கு இந்நிலங்களைத் திரும்ப ஒப்படைப்பதில் ஏதாவது சட்டச் சிக்கல்கள் ஏற்படுமானல் அவை சமாளிக்கப்படும்.

தனிப்பட்ட ஆட்கள் கோவில் வருமானங்களைச் சொந்தமாக எடுத்துக்கொண்டு விட்டதால் பல கோவில்களால் தங்கள் செலவுகளைச் சமாளிக்க இயலவில்லை.''

தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பையும் டெல்லி பொருட்படுத்தவில்லை!

புதுடில்லி, டிச. 17—

'தமிழ்நாட்டில் மேட்டுப்பாளையம் - உதகமண்டலம், மாயூரம் - தரங்கம்பாடி, நீடாமங்கலம் - மன்னர்குடி, பேரளம் - காரைக்கால் ஆகிய நான்கு கிளை இரயில் பாதைகளையும் எடுத்துவிடும் எண்ணம் இருக்கிறது"

என்று நாடாளுமன்ற மேலவையில் இரயில்வே அமைச்சர் சி.எம். புனச்சா கூறினர்.

கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் "இந்தப் பாதைகள் இலாபகரமாக இல்லை ; ஆனல் இந்தப் பாதைகளை மூடுவது பற்றி இதுவரை இறுதியாக முடிவு செய்யப்படவில்லை'' என்ருர்.

என்.வி. நடராசன் நாகர்கோயில் பயணம்

சென்னை, டிச. 17—

தி. மு. கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் இன்று இரவு நாகர்கோயிலுக்குப் புறப்பட்டுச் செல்கிருர்.

தொகுதியில் டாக்டர் மத்தியாசுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுவார்.

மேலும் தேர்தல் பணிகளைக் கவனிக்க அநேகமாக வாக்குப் பதிவு நாள்வரை தொகுதியிலேயே தங்கியிருப்பார் என்று தெரிகிறது.

ரூ.50-வரையில் போஸ்டல் ஆர்டர்

அஞ்சல் துறை ஏற்பாடு

ரூ. 10-வரையில்தான் தற்போது போஸ்டல் ஆர்டர்கள் வெளியிடப்படுகின்றன.

இனி ரூ. 50-வரை போஸ்டல் ஆர்டர்களை வெளியிட அஞ்சல் துறை ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கும் மசோதா ஒன்று மக்கள் சபையில் முன்மொழியப்பட்டது.

இ. தே. ரா.-வினருக்கு உதவி

வத்தலகுண்டு, டிச. 17—

இந்தியத் தேசிய இராணுவத்தில் (நேத்தாஜி படை) பணியாற்றிய வீரர்களுககு உதவிப் பணம் தரத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது ; மாதம் ரூ 50 உதவிப் பணமாகத் தரப்படும்.

உதவிப் பணம் பெறுவதற்காக அவர்கள், இத்திங்கள் 30-ஆம் நாளுக்குள் மாவட்டக் கலெக்டருக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும.

முந்திய ஆண்டு ரூ. 20 கோடி-- இந்த ஆண்டு ரூ. 40 கோடி!

இந்திய அரசு நிறுவனம் காட்டும் நட்டக்கணக்கு

கல்கத்தா, டிச. 17—

1967—68-ல் இந்திய அரசுக்குச் சொந்தமான இந்துஸ்தான் உருக்கு நிறுவனத்துக்கு ரூ. 40.12 கோடி நட்டமாம் ! முந்தைய ஆண்டில் ரூ. 20.55 கோடி நட்டமாம் !

அறிவாற்றலை எங்கிருந்தும் பெறலாம்

வரட்டுத் தத்துவத்தை விட்டு நிர்வாகத் திறமையைப் பெறுக

நம் நாட்டுச் சராசரி வருவாய் அண்டையிலுள்ள சிறிய நாடுகளைவிடக் குறைந்திருப்பதேன்?

இந்திய ஆட்சியாளர்கட்கு எச். வி. ஆர். ஐயங்கார் அறிவுறுத்தல்

சென்னை, 16—

"அறிவும் ஆற்றலும் எந்த ஒரு நாட்டின் பகுதிக்கும் ஏகபோக உரிமையல்ல; உலகெங்கும் அது பரவலாகக் காணப்படுகிறது. ஆகவே, பொருளாதார வளர்ச்சியடைய பிற நாடுகள் கடைபிடிக்கும் முறைகளை, அரசியல் விருப்பு வெறுப்புக் காரணமாக அறிந்துகொள்ளாமலிருப்பது தவறு.

"தொழில் துறையில் இந்தியா வளர்ச்சியடையவில்லை என்று நினைப்பது சரியல்ல; புள்ளிவிவரங்கள், 'வளர்ச்சியின் அளவை' மட்டுமே குறிப்பிடுகின்றனவேதவிர, 'தர உயர்வை'க் காட்டவில்லை; தொழில் வளர்ச்சிக்கு ஆதரவாக இயந்திரங்கள் உற்பத்தித் துறையில் நாம் கணிசமான முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

"நிர்வாகத் தவறுகள், கொள்கைக் கோளாறுகள் எவ்வளவோ இருப்பினும் நாடு பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்துதான் வருகிறது; அரசின் தொழிற் கொள்கை, 'காரிய சாத்திய நோக்கு'டன் சீரமைக்கப்பட்டால், தொழில் துறையில் புரட்சிகர முன்னேற்றம் காண முடியும்."

இவ்வாறு, 'பொருளாதார வளர்ச்சியில் சில நாடுகளின் அனுபவங்கள்' பற்றிய கருத்தரங்கின் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய திரு. எச். வி. ஆர். ஐயங்கார் சுட்டிக்காட்டி விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது:—

திட்டம் வகுப்பதில் இந்தியா அனுபவமும் ஆற்றலும் மிகுந்த நாடாகத் திகழ்ந்தபோதிலும், அதற்குப் பிறகு திட்டமிடத் துவங்கிய சிறிய நாடுகளிடமிருந்து சில விவரங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

படிப்படியாகத் திட்ட இலக்குகளை எய்தியுள்ள டுனீசியாவின் அனுபவத்தைப் பின்பற்றி இந்தியா தனது திட்டத்தை வகுத்துக்கொள்ளலாம்; வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்திக்கொள்ளும் முறையிலும், அடித்தள மக்களுக்குப் பயன்படும் வகையில் திட்டம் அமைப்பதிலும் அந்நாட்டை இந்தியா பின்பற்றலாம்.

மற்றும், எத்தியோப்பியா திட்டத்தைப் பின்பற்றி இந்தியாவும் தனது திட்டத்தை, 'தேசிய திட்டங்களும் மாவட்டத் திட்டங்களும் பின்னிப் பிணைந்த திட்ட'மாகச் சீரமைக்கலாம்.

அறிவாற்றல் என்பதற்கு வட்டார வரையறை கிடையாது -- உலகத்தின் பல பகுதிகளிலும் அது காணப்படுகிறது -- என்ற உண்மை ஆய்வுரைகளிலிருந்து புலப்படுகிறது; ஆகவே மற்ற நாடுகளின் அனுபவத்திலிருந்து இந்தியா பயன் பெறலாம்.

வெளிநாடுகளில் மிகவும் கவர்ச்சிகரமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அரசியல் வேறுபாடு காரணமாக அவற்றில் சிலவற்றை நாம் கண்ணெடுத்தும் பார்க்க மறுக்கிறோம்.

உதாரணமாக, இஸ்ரேல், தைவான் ஆகிய நாடுகளில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன; ஆனால் நம் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை காரணமாக அந்த ஆய்வுகளை நாம் அறிந்துகொள்ளவில்லை; இது வருந்தத்தக்கது; எனினும் நல்ல வேளையாக தைவானில் உருவாகிய புதிய ரக நெல் விதையை மட்டும் நாம் பயன்படுத்துகிறோம்.

நிர்வாகத் திறமையை அதிகரித்து--வரட்டுத் தத்துவ வாதங்களை விட்டொழித்து --- கண்கூடான நோக்குடன் திட்டங்களை வகுத்துச் செயலாற்றித் தொழில் துறையில் நாம் புரட்சிகரமான சாதனைகள் புரிய முடியும்.

அரசுடன் பொதுமக்கள் முழுமையாக ஒத்துழைக்காவிடில் திட்டம் வெற்றி பெறுது என்பதை இந்தியாவின் 20 ஆண்டு அனுபவம் காட்டுகிறது.

தென்கிழக்காசிய-மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏதோ தயவு காட்டுவதுபோல் நினைப்பதை விடுத்து, அந்நாடுகளின் உதாரணங்களை இந்தியா பின்பற்ற வேண்டும்.

சிறிய அண்டை நாடுகளைவிட இந்தியனின் சராசரி ஆண்டு வருமானம் குறைவாக இருக்கிறது என்பதை மறந்து விடலாகாது."

இருபது காசு நாணயம் வருகிறது

பத்துக் காசு நாணயத்திலும் புது வகை

புதுடில்லி, டிச. 16—

புதிய இருபது காசு நாணயங்களும், பத்துக் காசு நாணயங்களும் இந்த மாதம் 23-ம் நாளன்று வெளிவரும்.

இவை அலுமினியத்தாலும், தாமிரத்தாலும் ஆனவை.

இருபது காசு நாணயம் வட்ட வடிவிலும் நாலரை கிராம் நிறையுள்ளதாகவும் இருக்கும்; தற்போதைய ஐம்பது காசு நாணயத்தைவிட இது சற்றுச் சிறியதாயும், தற்போதைய இருபத்தைந்து காசு நாணயத்தைவிடச் சற்றுப் பெரிதாகவும் இருக்கும்.

பத்துக் காசு நாணயம் உருவில் தற்போதைய நாணயம்போலவே இருக்கும்; ஆனால் அதன் நிறை இப்போதிருக்கும் நாணயத்தைவிடச் சற்றுக் குறைந்திருக்கும்.

இந்த நாணயங்கள் மஞ்சள் நிறமாயிருக்கும்.

தற்போது புழக்கத்திலுள்ள நாணயங்களும் எப்போதும்போல செல்லுபடியாகும்.

இந்த நாணயங்களில் இந்தியில் 'பாரத்' என்றும், ஆங்கிலத்தில் 'இந்தியா' என்றும் பொறிக்கப்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டுக்கு டெலிவிஷன் நிலையம்

சென்னையில் அமைக்க ஏற்பாடு

சென்னை, டிச. 17—

சென்னையில் விரைவில் 'டெலிவிஷன்' நிலையம் ஏற்படுத்தப்படும்.

மவுண்ட் ரோடு அரசினர் தோட்ட மாளிகையிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் புதிய விடுதிக்கு அருகிலுள்ள 5 ஏக்கர் இடத்திலோ, அல்லது பறங்கிமலை -- பல்லாவரம் பகுதியிலுள்ள ஒரு குன்றிலோ இந்த நிலையத்தை ஏற்படுத்தலாமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது.

மத்திய ஒலிபரப்புத் துறை அமைச்சர் கே. கே. ஷாவும், தமிழகச் செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்துவும் மவுண்ட் ரோடு அரசினர் மாளிகையிலுள்ள இடத்தைப் பார்வையிட்டனர்.

டெலிவிஷன் நிலையத்தின் ஒரு முக்கிய பகுதியை உயரமான இடத்தில் அமைக்கவேண்டுமாதலால், பறங்கிமலைப் பகுதியில் இந்த நிலையத்தை ஏற்படுத்தலாமென்று யோசனை கூறப்பட்டது; எந்த இடம் என்பதை நிச்சயிக்கும் பொறுப்பு மாநில அரசிடம் விடப்படும்.

இந்த டெலிவிஷன் நிலையத்தின் நிகழ்ச்சிகளை 150 மைல் சுற்று வட்டாரத்தில் பார்க்க முடியுமெனக் கூறப்படுகிறது.

எத்தனைப்பேர் டெலிவிஷன் செட் வாங்குவார்கள் -- போதிய ஆதரவு கிடைக்குமா என்பது விவரங்கள் பரிசீலனை செய்யப்பட்டுவருகின்றன.

தமிழக அரசின் எதிர்ப்பு புரியவில்லையாம்!

நிஜலிங்கப்பாவின் 'பெரிய இடத்து'ப் பேச்சு!

பெங்களூர், டிச. 15—

"அனைத்திந்திய வானொலி காலை நேரத்தில் ஒலிபரப்பும் ஆங்கில இந்திச் செய்தி அறிக்கைகளின் நேரங்களில் செய்யப்பட்டுள்ள மாறுதலை எதிர்த்து மத்திய அரசிடம் தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது வருந்தத்தக்கதாகும்"

என்று அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, பெங்களூரில் செய்தியாளர்களிடம் கூறினார்.

"அதனால் என்ன வந்துவிட்டது? இந்தப் பிரச்சினைமீது எதற்குக் கிளர்ச்சி இருக்கவேண்டும் என்பதே எனக்குப் புரியவில்லை" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"இந்தியைக் கொல்லைப்புறம் வழியாகத் திணிக்கும் முயற்சியே இது' என்று தமிழக அரசு கருதுகிறது" என்று ஒரு செய்தியாளர் சுட்டிக்காட்டியபோது, 'இதை நான் ஒப்புக்கொள்ளவில்லை' என்று அவர் தெரிவித்தார்.

"என்.சி.சி.-யில் இந்தி ஆணைச் சொற்களைப் பயன்படுத்துவதற்குத் தமிழக அரசு காட்டும் எதிர்ப்பை நான் துளியும் ஒப்புக்கொள்ளவில்லை; இத்தகைய போக்கு இருந்துவந்தால், எப்படி ஒருமைப்பாட்டைக் காண முடியுமென்பது எனக்குப் புரியவில்லை" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

புதுடில்லி, டிச. 14—

"வசதிக் குறைவு காரணமாக முதியோர் உதவிப் பணத் திட்டத்தைக் கைவிட நேரிட்டது"

என்று, சமுதாய நல அமைச்சர் பி. கோவிந்தமேனன், மாநிலங்கள் அவையில் தெரிவித்தார்.

"இந்தத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்" என்று உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

அண்ணா சிகிச்சை நிதி:

தஞ்சை மாவட்டத்தில் அளிக்கப்பட்ட தொகை விவரம்

தஞ்சையில் 11-12-68 அன்று நடைபெற்ற அண்ணா சிகிச்சை நிதியளிப்புக் கூட்டத்தில் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம் நிதியளித்த தோழர்கள்—அமைப்புகளின் விவரம் இங்கு வெளியிடப்படுகிறது. (மொத்தத் தொகை, 14—12—68 அன்று வெளியிடப்பட்ட நிதி வரவுக் கணக்கு விவரத்தில் சேர்க்கப்பட்டுவிட்டிருக்கிறது):—

தஞ்சை வட்ட தி.மு.க. சார்பாக	1,051.00
நன்னிலம் ,,	1,001.00
நாகை ,,	601.00
அறந்தாங்கி ,,	501.00
சீர்காழி ,,	350.00
மாயூரம் ,,	305.00
மன்னார்குடி ,,	125.00
திருத்துறைப்பூண்டி ,,	501.00
கா. சுப்ரவேலு எம்.பி.	500.00
ந.சோமசுந்தரம் எம்.எல்.ஏ.	250.00
புலவர் முருகையன் ,,	250.00
ஆ. துரையரசன் ,,	250.00
பேராவூரணி கிருஷ்ணமூர்த்தி ,,	250.00
தஞ்சை எஸ். பெத்தண்ணன்	501.00
தஞ்சை பரிசுச் சீட்டு விற்பனையாளர்கள்	303.00
அரசினர் தொழிற்பயிற்சிப் பள்ளி அலுவலர்	105.00
தஞ்சை நகரச் செயலாளர் எஸ். நடராசன்	101.00
அய்யம்பேட்டை முத்து	101.00
வில்லாமரிய நர்சரிப் பள்ளி	151.00
நூற்பு ஆலைத் தோழர்கள்	101.00
கு. குல்தான்	101.00
ப. சுப்பிரமணியன்	101 00
நாகை தியாகராசன்	101 00
வி. வேணுகோபால் நாயுடு	101 00
ஏ. ஜோசப் ராஜ்	101.00
ஏ. எஸ். இராணி	101.00
நாகை நகர தி.மு.க. கிளை	501.00
அம்மன்பேட்டை தி.மு.க. கிளை	121.00
தஞ்சை 1-வது வட்டம்	51.00
12 ,,	51.00
24 ,,	51.00
30 ,,	50 00
21 ,,	51 00
5 ,,	73.00
32 ,,	51.00
28 ,,	50.00
3 ,,	75.00
20 ,,	51.00
6 ,,	51.00
26 ,,	51.00
2 ,,	51.00
19 ,,	70.00
10 ,,	55.00
18 ,,	51.00
22 ,,	80.00
7 ,,	51.00
31 ,,	51.00
16 ,,	51.00
15 ,,	51.00
ஒரத்தநாடு நகர தி.மு.க.	101.00
ஆலங்குடி தி.மு.க.	101.00
குருவிக்கரம்பை தி.மு.க.	100.00
மன்னார்குடி நகர தி.மு.க.	101.00
தஞ்சை நிக்கல்சன் கூட்டுறவு பாங்கி கூட்டுறவு பண்டகசாலைஊழியர்கள்	81.00
இரா. இராசன் 2-வது தவணையாக	150.00
திராவிடர்க் கழகம் சங்கிலி முத்து	51.00
சாமியப்பா கூட்டுறவு பயிற்சிக் கழக மாணவர்கள்	70.00
அரசினர் சரபோஜி கல்லூரி மாணவர்கள்	51.00
கோட்டை காய்கறி வியாபாரிகள்	51.00
எஸ். தங்கவேலு	101.00
ஆர். எம். எச். மருத்துவமனை ஊழியர்கள்	50.00
செல்வம் உணவு	101.00
கே. அப்துல்லா	51.00
நாடியம் குஞ்சிதபாதம்	101.00
ஏ. இராசமாணிக்கம்	100.00
கந்தர்வக்கோட்டை அடைக்கலம்	250.00
ஓய். சேவியர்	100.00
தஞ்சை நகர அரசு ஊழியர்கள்	444.00
போர்வையை ஏலம் எடுத்த வகையில் கந்தர்வக்கோட்டை அடைக்கலம்	100.00
வெள்ளி டம்ளர் ஏலம் எடுத்த வகையில் கு. சுல்தான்	50.00
பேனா ஏலம் மூலம்—பி. சேவியர்	101.00
பி. எஸ். தங்கமுத்து	101.00
பழனிச்சாமி உடையார்	201.00
பாண்டி	51.00
எஸ். சாமிநாதன்	51.00
மாணிக்கம் பிள்ளை	51.00
பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள்	50.00
அரசினர் பரிசுச் சீட்டு விற்பனையாளர்கள்	105.00
குலமங்கலம் முத்துப்பிள்ளை	101.00
ஜி. இராதாகிருஷ்ணன் பி.ஏ.பி.எல்.	101.00
பரசலூர் கலைஞர் மன்றம்	51.00
சிம்லக்ஸ் தியேட்டர் முத்தையா	101.00
எடமேலையூர் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்	501.00
எடமேலையூர் தேவராச சாளுவர்	101.00
மன்னை பாலகிருஷ்ணன்	101.00
வலங்கைமான் இராமச்சந்திர ஐயர்	51.00
தஞ்சை ஏ. வி. பதி -- பேனா ஏலம் மூலமும் நிதியாகவும்	50.00
பட்டுக்கோட்டை தி. மு. க. சுப்பையா	51.00
அரசு கால்நடை உதவியாளர்கள்	51.00
தஞ்சாவூர் கபே	51.00
ஆர். ஜேம்ஸ்	50.00
ஜி. நாராயணசாமி மூலம்	70.00
சானகிராமன்	51.00
தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்	51.00
பத்மா உணவு விடுதி இராசேந்திரன்	75.00
பால் விற்பனையாளர்கள்	53.00
பூண்டி புட்பம் கல்லூரி மாணவர்கள்	201.00
கரந்தை புலவர் கல்லூரி	51.00
பர்வதராசகுல சங்கச் சார்பாக	101.00
நகராட்சி பில் கலெக்டர்கள்	61.00
அண்ணா நாளங்காடி தோழர்கள்	51.00
எஸ். எம். பாண்டியன்	75.00
ராசாராம் வெல்டிங் பட்டறை	51.00
சாதக் கடை வர்த்தகர்கள்	75.00
டி. பி. கண்ணன்	51.00
சுகுமார்	51.00
11—12—68 தஞ்சையில் நடைபெற்ற அண்ணா சிகிச்சை நிதியளிப்புக் கூட்டத்தில் ரூ 50-க்குக் குறைவாக 25, 20, 15, 10, 5-என்ற விகிதத்திலும் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம் மேடையிலும் சுற்றுப் பயணத்தின் போது ஆங்காங்கும், நிதியாகவும் மாலைக்குப் பதிலாகவும் தஞ்சை மாவட்டக் கழக அமைப்புக்கள், சார்பு துணை மன்றங்கள் ஆகியவற்றிலும், கழகத் தோழர்கள், பொதுமக்கள் ஆகியோராலும் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை	10,841.05
ஆக மொத்தம் ரூ.	25,979.05

கலைஞர்கள் இழிவாகக் கருதப்பட்ட காலம் மறைந்துவிட்டது

காலத்துக்குக் காலம் தமிழகம் கலைத்துறையில் வளர்ந்துவருகிறது

இந்தப் பரம்பரை தொடர்ந்து வளர படத் துறையினர் கைகொடுக்க வேண்டும்

பாராட்டு விழாவில் அறிஞர் அண்ணா ஆய்வுரை

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சென்னையில் நடந்த சிவாஜி கணேசன் பாராட்டு விழாவில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றுகையில் தமிழ் நாட்டின் கலைத் துறைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசியதாவது:—

"கலைஞர்களுக்கு இருந்து வந்த இழிநிலை நீண்ட இடைவெளிக்குப் பிறகுதான் நீங்கியது.

பழங்காலத்தில் கலைஞர்கள் ஒதுங்கி வாழ்ந்தார்கள்; கலைஞர்களுக்குப் பெண் கொடுப்பதற்குக்கூட தயங்கிய காலம் ஒன்றிருந்தது. 'கலைஞன்' என்று சிறப்புப் பட்டம் அளித்து அவர்கள் அழைக்கப்பட்டதில்லை. அந்நாள் முதல் நான் கலையுலகம் பற்றி அறிந்துவந்துள்ளேன்.

நாடகக் காலம் முதல் இன்று வரை தமிழகம் எத்தனையோ சிறந்த நடிகர்களை--எத்தனையோ நடிகைகளை-படத் தயாரிப்பாளர்களைத் தந்திருக்கிறது. தமிழ் நாட்டில் என்றைக்கும் கலைஞர் பஞ்சம் இருந்ததில்லை.

காலத்துக்குக் காலம் தமிழகம் கலைத் துறையில் வளர்ந்து வந்துள்ளது. தியாகராஜ பாகவதர்-அவர் காலத்தில் தலைசிறந்த நடிகராக விளங்கினார்; சின்னப்பா -- அவர் காலத்தில் தலைசிறந்த நடிகராக விளங்கினார்; கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் நகைச்சுவை தமிழ் மக்களாலும், பிறபகுதி மக்களாலும் வரவேற்றும் பாராட்டப்பட்டது; எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். இராமசாமி, எஸ். எஸ். இராசேந்திரன் போன்ற பல நடிகர்கள் --- இன்னும் எத்தனையோ பேர் -- அவர்களது பெயர்களைச் சொல்ல இயலவில்லை--இவ்வாறு கலைப் பரம்பரை வளருகிறது; இந்தப் பரம்பரை தொடர்ந்து வளராவிட்டால் அது நல்லதல்ல!

பாத்தி கட்டி --களை எடுத்து உழைத்தால் தான் பலன் கிடைக்கும்; அதுபோல், நாடகத் துறையினால்தான் சிறந்த இயக்குநர்கள் கிடைக்க இயலும்.

நாடகத்தில் நடிப்பதன் மூலம் தான் எந்த நடிப்பு மக்களால் வரவேற்கப்படுகிறது என்று உணர்ந்து வளர்த்துக்கொள்ள முடியும்.

நாம் ஒவ்வொருவரும் உலகத்தில் பல காட்சிகளைக் காண்கிறோம்; அதைப் பார்த்து மனத்தில் படமெடுத்து வைத்துக்கொள்ள சிலரால்தான் முடிகிறது. பிச்சைக்காரன் --- டாம்பீக வாழ்வு நடத்துகிறவன் --- சோகம் நிரம்பியவன் --- ஏழ்மையிருந்தாலும் உயர்ந்த பண்புடையவன் ஆகிய இவர்களை நாம் பார்க்கத்தான் செய்கிறோம்; ஆனால் உண்மையான நடிகன், பார்த்ததைப் படமெடுத்து வைத்துக்கொள்கிறான்.

அப்படிப்பட்ட திறமையானவர்கள் பலர் இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பல்வேறு நடிகர்களை ஒன்றாக இணைத்து ஒரு படத்தை மத்திய அரசு தயாரித்தால், 'உலகிலே இருக்கின்ற மற்ற யாருக்கும் ஒரு துளியும் எடை குறையாதவர்கள் இங்கே இருக்கிறார்கள்' என்பதை உலகத்திற்குக் காட்ட முடியும்.

இன்று எத்தனையோ இடர்களுக்கு இடையில் நடிகர்கள் நடிக்கிறார்கள். பட உற்பத்தியாளர்கள் எவ்வளவோ தொல்லைகளுக்கிடையில் -- 'தொல்லை' என்று நாகரிகமாகச் சொல்கிறேன் -- கடன்களுக்கிடையில் படம் எடுக்கிறார்கள்.

'புதிய புதிய விஞ்ஞானக் கருவிகள் வேண்டும்' என்று படத் துறையாளர் கேட்டால், அந்நியச் செலாவணியைக் காரணம் காட்டித் தடை போடுகிறார்கள்!

இத்தகைய விஞ்ஞானம் வளர்ந்திராத 'பராசக்தி' காலத்திலிருந்து விஞ்ஞான முன்னேற்றம் அடைந்துள்ள இக்காலம் வரை, சிவாஜி கணேசன் தமது திறமையைக் காட்டி வந்திருக்கிறார்.

சிவாஜி கணேசன்போல் திறமையுள்ளவர்கள், நமக்குத் தொடர்ந்து கிடைக்கவேண்டும். இன்று நாடகத் துறையிலுள்ள எத்தனையோ பேர் ஒதுங்கி நிற்கிறார்கள்; ஒதுங்கி நிற்கிற அவர்கள் உள்ளத்தில் எத்தனையோ ஆசாபாசங்கள் உண்டு; புதிய முறையில் நாடகங்களை நடத்தி செம்மையான முறையில் அவர்களைப் பயன்படுத்த வேண்டும்.

நாடகத்துறை வளர்ச்சி அடைவது பற்றி திரு. எஸ். எஸ். வாசன் சொன்னார்; இந்த வளர்ச்சிக்கு அரசின் பங்கு என்ன என்பதை சென்ற ஆண்டிலேயே நான் தெரிவித்தேன்.

ஒரு திரைப் படம் எடுக்க ரூ. 20 இலட்சம் செலவு செய்கிறீர்கள்; அதில் ஒரு பத்தாயிரம் ரூபாயை நாடக வளர்ச்சிக்கென்று நீங்கள் ஒதுக்கினால், அதற்கு சமமான தொகையை அரசு தரும் என்று கூறினேன். அந்தத் தொகையை வைத்து நாடக நடிகர்கள் நலிந்துபோகாமல் காப்பாற்றலாம்; நாடகமும் வளரும்; அதன் மூலம் திரைப்படத் துறையும் வளரும்."

ஒய். பி. சவான்

திரு. சவான் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழ் மொழி, பழமையான இலக்கிய வளமுள்ள மொழி என்பதை நான் அறிவேன்.

"இங்கு வந்த பிறகுதான், சிவாஜி கணேசன், **'தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டவர்'** என்பது எனக்குத் தெரியவந்தது; அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்."

கே. கே. ஷா

திரு. கே. கே. ஷா பேசுகையில் கூறியதாவது:

"இங்கு வந்த பிறகுதான், சிவாஜி கணேசனுக்கு உள்ள புகழின் மர்மம் எனக்கு விளங்கியது. **சிவாஜிக்கு அண்ணா அவர்கள், குருவாக இருந்திருக்கிறார்; எனவே, நல்ல குருவால் உருவாக்கப்பட்ட மாணவன் சோடை போகமாட்டான் என்பதை சிவாஜி கணேசன் மெய்ப்பித்து விட்டார்.**"

சிவாஜி கணேசன்

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து சிவாஜி கணேசன் பேசுகையில் கூறியதாவது:—

"நான் திரைப்பட உலகில் நடைபோட உறுதுணையாக இருந்தவர்களும், 'நான் நடிகன்' என்று மார்தட்ட உதவியவருமான அண்ணா அவர்களும் சேர்ந்து என்னை வாழ்த்தியதைக் கண்டு மனம் பூரித்துப் போனேன்.

"நான் திரைப் பட உலகில் நுழைந்தபோது, பாடத்தைக் கொடுத்து ஒப்புவிக்கும்படியும், நடித்துக் காட்டும்படியும் கூறி அண்ணா அவர்கள் என்னை வளர்த்தார்கள்.

"'பராசக்தி' படம் தயாரான போது, 'இந்தா ஏணி --- இதில் ஏறு' என்று அண்ணா அவர்கள் என்னைப் பட உலகில் கைதூக்கிவிட்டார்; எந்த இடத்தில் இருந்தாலும் மறப்பதும் இல்லை -- மறுக்கவும் மாட்டேன்."

அது நாடக நடிப்பு -- இது இதயத் துடிப்பு!

சென்னை, டிச. 16 —

"சிவாஜி கணேசன் எனக்கு நாடகத்தில் பொன்னாடை போர்த்தியிருக்கிறார். நான் அவருக்கு இன்று பொன்னாடை போர்த்தினேன்.

"நாடகத்தில் நான் அவரை ஆட்டிப்படைக்கிற குருவாக இருந்தேன்; இப்போது அவரைக் கண்டு பெருமைப்படும் அண்ணனாகப் பொன்னாடை போர்த்தினேன்.

"அன்றைய தினம் நடந்தது நடிப்பு — இன்றைய தினம் நடப்பது இதயத் துடிப்பாகும்! எனவே பாராட்டுகிறேன்!"

--அறிஞர் அண்ணா

(சிவாஜி கணேசன் பாராட்டு விழாவில்)

சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் தான் அதிக அலுவல்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

டிவிஎஸ் வினியோகிக்கும் உறுப்புகள் நம்பகமானவை

உழைப்பிற்கு ஆராய்ச்சி செய்யப்பெற்ற உறுப்புகளையே உபயோகித்து செலவைக் குறையுங்கள்

WL Commercial Wheels
Standard Battery
Springs and Leaves
FERODO Brake Linings and Clutch Facings
LUCAS TVS Automobile Electrical Equipment
MICO Fuel Injection Parts
BANCO-ROYAL Gaskets and Radiators
AP Lubrication Fittings
Hydraulic Brake System
KAP AUTO PARTS
TRANCO VALVES
BORG & BECK Clutch Spares
CD TVS Compressors and Servos
ROLON Timing Chains
allite Bulbs
DOUBLE PRECISION PARTS
SIRUBBER Engine Mountings and Bushing Kits
Tie Rod Ends
Fenner Fan Belts
FRITZ Filter Element
SUNKAST Clutch Housings, Brake Drums and King pins
ABC Roller Bearings
TVS Hydraulic Brake Parts
HELLA Horns
NBC Ball Bearings
TEX Wiper arms and Blades

டிவிஎஸ் வினியோகிக்கும் உறுப்புகளை உற்பத்தி செய்வோரில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர். அவை நீண்ட நாள் உழைக்கும் என்பதில் ஐயமில்லை.

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ்
பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை
சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்
சுந்தரம் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதராஸ்-
பெங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டினம்
மதராஸ் ஆட்டோ சர்வீஸ்
பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா
TVS

அறிஞர் அண்ணா

சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள் :—

		ரூ. காசு
16-12-68 இதழ்த் தொடர்ச்சி		1,06,070.47
காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீசு உரிமையாளர் ஏ. பி. கண்ணபிரான்		501.00
வேலூர் எம். பி. சாரதி எம்.எல்.ஏ.		250.00
ஆம்பூர் நகராட்சித் தலைவர் ஆர். சம்பங்கி		101.00
தேனி அண்ணா மன்றம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் உண்டியல் வசூல்—எஸ். சுந்தரம் மூலம்		41.00
மதுரை-1 வி. ஆர். செகநாதன் மூலம் -- நண்பர்கள்		101.00
சென்னை மு. வேதாசலம் எம்.எல்.ஏ.		101.00
செங்கற்பட்டு துணைக் கருவூலத்தில் அடங்கியுள்ள 23 பரிசுச் சீட்டு ஏஜெண்டுகள்		51.00
நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மூலம் :—		
இராசபாளையம் எஸ். வடிவேல் சகோதரர்கள்	100.00	
சிவகாசி கிராமிக் ஆர்ட்ஸ் தொழிலாளர்	16.00	
சிவகாசி வே. கருணாகரன் மூலம்	25.00	
சிவகாசி குருசாமி	10.00	151.00
ஏ. ஆர். சவுண்ட் சர்வீஸ் அழகிரிசாமி		10.00
ஏழாயிரம் பண்ணை ஆறுமுகச்சாமி		6.00
,, அதிராமன்		1.00
மேலபுலம்புதூர் தி. மு. க. மாணிக்கம்		5.00
கல்கத்தா வங்கத் தமிழர் சங்கம்—தோழர் மு. இராமையா மூலம்		51.00
திருவண்ணாமலை எம்.ஜி.ஆர். கலைக் குழு சார்பாக		101.00
குன்னூர் தே. ஆனந்தராஜ்		3.00
சேலம் ஓய்வு பெற்ற ஆசிரியர் கழகம் -- எஸ். ஆர். இராசாராம் மூலம்		10.00
குந்தா பாலம், குந்தா மின்வாரியம் தோழர்கள்—கு. பா. சின்னராசு மூலம்		26.00
சென்னை–நுங்கம்பாக்கம் நக்கீரர் நகர் நண்பர்கள்		46.00
சிங்கம்புணரி தோழர்கள் :—		
வி. சி. பொன்னிவளவன்	10.00	
வி. ஆர். சகநாதன்	10.00	
அழகர்சாமி, இராமச்சந்திரன், சானகிராமன், நாகராசன், வர்கீஸ், மாதவன், அஜீஸ் ஆகிய 7 தோழர்கள் தலா ரூ. 5 வீதம்	35.00	
யாகூர்	7.00	
வி. ஆர். சகநாதன் நண்பர்கள்	39.00	101.00
சிங்கம்புணரி தோழர்கள் :—		
மா. சேக்குப்பாண்டியன்	20.00	
ஏ. எம். இப்ரகிம்	10.00	
செ. குருசாமி	10.00	
சுப. கிருஷ்ணன்	10.00	
தி. அ. கி. நடராசன்	10.00	
பி. எஸ். எஸ். ராமசாமி	10.00	
மு. வெங்கடாசலம்	10.00	
கா. பெரியசாமி	5.00	
வீ. சேவுகப்பெருமாள்	5.00	
கரு. அண்ணாமலை	5.00	
மற்றும் ஏ. எம். இப்ரகிம் நண்பர்கள்	44.00	149.00
திருச்சி எம். எஸ். மணி எம்.எல்.ஏ.		250.00
திண்டிவனம் கே. பாண்டுரங்கன் பி.ஏ.பி.எல்.		11.00
பாங்கொளத்தூர் ஊராட்சித் தலைவர் ஏ. கிருஷ்ணசாமி		11.00
வல்லம் சு. சகாதேவன்		11.00
சென்னை பர்மா பஜார் வியாபாரிகள் சார்பாக		501.00
சென்னை கோபாலசாமி மூலம் (மீசை)		101.00
ஆக மொத்தம்		1,08,761.47

மதுரை மாவட்ட தி. மு. க. குழுக் கூட்டம்

★

"மதுரை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 18–12–68 காலை 10-மணிக்கு மதுரை ஆழ்வார்புரம் திருமண மண்டபத்தில் நடைபெறும்; ஆய்வுக்கு வருபவை : அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி -- நகராட்சித் தேர்தல்; மாவட்டப் பிரதிநிதிகள், மற்றும் சட்டமன்ற -- நாடாளுமன்ற -- பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

கல்விப் பணிக்குக் காணிக்கை செலுத்துவீர்!

★

மதுரை, டிச. 16—

"திருப்பதி உண்டியலில் காணிக்கைச் செலுத்துபவர்கள், அதில் பாதியைத் திருத்தணி உண்டியலிலும் செலுத்தலாம்; இதன் மூலம் இரண்டு கோயில்களுக்குக் காணிக்கைச் செலுத்திய பலனும் மன நிறைவும் கிடைக்கும்.

"திருத்தணி உண்டியலிலும் காணிக்கை செலுத்துவதால், அக்கோயிலின் நிதி வசதி பெருகி --- உபரித் தொகையை, கல்விக்கூடங்கள் திறப்பது போன்ற நல்ல பணிகளுக்குப் பயன்படுத்த முடியும்."

—கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்



மத்தியாசுக்கு பி. சோ. கட்சி ஆதரவு

மதுரை, டிச. 17—

"சுதந்திரா—தி. மு. க.—முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்ற சுயேச்சை வேட்பாளரான டாக்டர் மத்தியாசை ஆதரிப்பதென்று தமிழ் நாடு பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி தீர்மானித்திருக்கிறது.

"தி. மு. க. தலைமையிலான கூட்டணி, கடந்த பொதுத் தேர்தலின்போது நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியைச் சுதந்திரக் கட்சிக்கு விட்டுக் கொடுத்தது; அந்த நியாயத்தின்பாற்பட்ட உரிமையினால், இப்போதும் இந்தத் தொகுதியானது சுதந்திரக் கட்சிக்கே இடைத் தேர்தலிலும் சேர வேண்டும்"

என்று, பி. சோ. கட்சிச் செயலாளர் எம். ஆறுமுகசாமி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

டாக்டர் மத்தியாசுக்கு 'தராசு' சின்னம் தரப்பட்டிருக்கிறது.

இறுதிப் போட்டியில் எழுவர்

நாகர்கோவில், டிச. 16—

நாகர்கோவில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக நின்ற ஜி. கிறிஸ்தோபர், தமது வேட்பு மனுவை இன்று பிற்பகல் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற இன்றே கடைசி நாளாகும்.

இப்போது டாக்டர் மத்தியாஸ், காமராசர் உட்பட 7-பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

சனவரி 8-ம் நாளன்று தேர்தல் நடக்கும்; மறுநாளே முடிவு அறிவிக்கப்படும்.

டாக்சி -- ஆட்டோ தொழிலாளர் கோரிக்கைகள் ஏற்பு

டிசம்பர் 20-ல் நடைபெறவிருந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

சங்கத் தலைவர் என். வி. நடராசன் அறிவிப்பு

சென்னை, டிச. 16—

தமிழ் நாடு டாக்சி--ஆட்டோ தொழிலாளர் சங்கப் பேரவைக் கூட்டம் 16—12—68 இரவு 9-30 மணிக்கு சிந்தாதிரிப்பேட்டை புது பங்களா வீதி திருமண மண்டபத்தில், சங்கத் தலைவர் என். வி. நடராசன் எம்.எல்.சி. தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகப் போலீசுத் துறை அதிகாரிகள் உறுதியளித்திருப்பதால், டிசம்பர் 20-ம் நாள் நடத்தவிருந்த வேலைநிறுத்தம், இப்போதைக்குத் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

சங்கத்தின் சார்பாக ஐந்து மாதங்களுக்கு முன்பு போலீசுக் கமிஷனர் அவர்களுக்கு விடுத்திருந்த ஐந்து கோரிக்கைகளைக் குறித்து சங்கத் தலைவர் என். வி. நடராசன் அவர்கள், போலீசுக் கமிஷனர்—போக்குவரத்துத் துணைக் கமிஷனர் ஆகியோருடன் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து இன்று மீண்டும் போலீசுக் கமிஷனர் -- போக்குவரத்துத் துணைக் கமிஷனர், சட்டம் -- ஒழுங்கு துணைக் கமிஷனர் ஆகியோரையும், சங்கப் பொதுச்செயலாளர்—மற்றும் நிர்வாகிகளையும் கொண்ட கூட்டம் கமிஷனர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலுக்குப் பிறகு இறுதியாக ஐந்து கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்வதாக போலீசுக் கமிஷனர் உறுதியளித்தார்.

"இந்த உறுதிமொழிகளை மீறிப் போலீசார் எவரேனும் டிரைவர்கள்மீது வழக்குத் தொடர்ந்தால், டாக்சி -- ஆட்டோ தொழிலாளர் சார்பில் போலீசு அதிகாரிகளை உடன் சந்தித்து நிலைமைகளை விளக்கினால், உரிய பரிகாரம் காண்பதற்கு உடனடியாக ஆவன செய்யப்படுமென்றும் போலீசுக் கமிஷனர் உறுதியளித்திருக்கிறார்.

"எனவே, 20—12—68 அன்று நடைபெற இருந்த டாக்சி -- ஆட்டோ தொழிலாளர் வேலைநிறுத்தம்—போலீசுக் கமிஷனரும் மற்ற அதிகாரிகளும் தங்கள் உறுதிமொழிகளை நடைமுறையில் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையின்மீது—இப்போதைக்குத் தேவையில்லை என்று, பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது"

என்று சங்கத் தலைவர் என். வி. நடராசன் எம்.எல்.சி. தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13. அச்சிட்டு வெளியிடப்படுகிறது.